[1978 மார்ச் 31

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர வர்களே, அத்தகைய திட்டங்கள் பல செயல் முறையில் இருந்து வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவரவர்களே, வருகின்ற ஆண்டு முதல் ஹையர் செகண்டரி படிப்பினை நாம் ஆரம்பிக்க இருக்கிறோம். இந்த மாணவர்கள் தொழில் கல்வியைப் பயின்று வேலை இல்லை என்ற நிலை ஏற்படாத வண்ணம் அவர்களுக்கு இரண்டாண்டுகளுக்குள்ளாக வேலை வாய்ப்பினைத் தரத்தக்க வகையில் திட்டத்தினை நிறைவேற்றி அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர வர்களே, அத்தகைய வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு மத்திய அரசும் மாநில அரசும் அது பற்றி பேச்சு வார்த்தை நடத்தி வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

## புயலால் பாதிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு உதவி

* 740 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சமீபத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயலால் பாதிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு விசேஷ உதவியளிக்க தீர்மானித்திருப்பதாக பல்கலைக் கழக மானியக் கமிஷன் தமிழக அரசுக்குத் தெரிவித்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

(முற்பகல் 9-30)

திரு. மு. ஆறுமுகம்: அண்மையில் பெய்த பெருமழை' புயல் காரணமாக திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் 130 ஆண்டுகளாக உலகம் முழுவதிலும் இருந்து திரட்டி வைக்கப்பட்ட 33,000-க்கு மேற்பட்ட அரிய நூல்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. நாற்பது லட்சம் ரூபாய்க்கு மேல் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அதை ஈடு செய்ய அரசாங்கம் கணிசமான உதவித் தொகை கொடுக்க முன்வருமா?

1978 மார்ச் 31]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மைய அரசு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கல்லூரிகளுக்கும் மற்றும் பள்ளிக்கூடங்களுக்கும் அவற்றைச் செப்பனிட மாநிலத்திற்கு திட்ட உதவித் தொகையாத முன்பணமாக ரூ. 1.22 கோடி வழங்கியுள்ளது. அதில் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிக்கு ரூ. 12 லட்சம் தரும்.

திரு. செ. இராமலிங்கம்: கல்லூரி ஆசிரியர்கள் தேர்வுகளைப் புறக்கணித்து நடத்திய போராட்டத்தைத் திரும்பப் பெற்ற நேரத்தில் நமது கல்வி அமைச்சர் அவர்கள் சில உறுதி மொழிகளை அவர்களுக்கு அளித்தார்கள். அந்த உறுதி மொழியை வரவேற்று கல்லூரி ஆசிரியர்கள் ஒரு அறிக்கையை விட்டார்கள். அதற்குப் பின்னுல் இன்றைய தினம் 78 ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறுர்கள். அரசு அந்த உத்தரவை திரும்பப்பெற்று மீண்டும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் எல்லாம் அந்தப் பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில்தான் எடுக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: சமீபத்தில் பெய்த மழை, புயல், வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பல கல்லூரிகளுக்கு மானியம் கொடுக்க பல்கலைக் கழக கமிஷன் மூலம் மத்திய அரசிடம் நிவாரணம் கேட்கப்பட்டுள்ளதா? அப்படிக் கேட்கப்படாவிட்டால் இனிமேலாவது கேட்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மைய அரசு இதற்காகத் திட்ட உதவித் தொகை முன்பணம் வழங்கியுள்ளது என்பதை முதலில் கூறியிருக்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தற்போது கல்வி முறையை 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 3 என்ற முறையில் மாற்றியமைத்திருக்கிறுர்கள். இந்த அடிப்படையில் இரண்டு ஆண்டுக் கல்வியை உயர்நிலைப் பள்ளிகளில் துவங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. கிராமங்களில் உள்ள ஏழை மாணவர்கள் பயன் அடையக் கூடிய முறையில் பத்தாண்டுக் கல்வியை நடுநிலைப்பள்ளிகளில் ஆரம்பிக்க அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவை அவ்வப்போது ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புயலால் பாதிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு விசேஷ மானிய உதவி தரப்படுகிறதா என்பது கேள்வி, திரு. இராசமாணிக்கம் அவர்கள் அதற்கு சம்பந்தமில்லாத கேள்வியைக் கேட்கிறுர்கள்.

திரு. மா. மணிமாறன் ; வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள், தனியார் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள், ஹரிஜன நலப் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள் இவர்களுக்கு 'அட்டா'வில் பிடிக்கப்பட்ட பணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்பது தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால் அந்தப் பணத்தைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்லலாம்.

திரு. எம். ஏ. ஜெயவேலு : அடிக்கடி மாணவர்களிடையே, ஆசிரியர்களிடையே புயல் வீசுகிறது, அதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அத்தகைய நிலை ஏற்படாமல் இருக்க யு. ஜி. ஸி. ஏதாவது நிரந்தரமான முடிவு காண அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசாங்கம் புயலைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## Nagappattinam Panchayat Union

* 741 Q—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether there is any representation or proposal to bifurcate the present Nagappattinam Panchayat Union into two Unions viz., Nagappattinam Union and Keezhaiyur Union; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:-

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. ஆறுமுகம்: பொதுவாக தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாயத்து யூனியன்களை, 60 ஊராட்சிமன்றங்களுக்கு மேல் இருக்கக் கூடிய ஒன்றியங்களைப் பிரிக்கும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து; பெரிய ஒன்றியங்களைப் பிரிக்கிற உத்தேசம் இருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ்: புதுக்கோட்டையிலுள்ள திருவலம் யூனியனைப் பிரிக்கப் போவதாகச் சொல்கிறார்கள். அது எப்போது பிரிக்கப்படும் ? (விடையில்லை.)

TRUTH ALONE TRIUMPHS